**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.162/2018**

பெயர்-திரு. மஞ்சி நாள்.09.10.2025

**வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார். (சாட்சி கன்னடம் மொழி மட்டுமே தெரியும் என்பதால், கன்னடம் மொழிபெயர்பாளர் வழக்கறிஞர் திரு.ஆர்.கார்திகேயன் உதவியுடன் சாட்சி விசாரிக்கப்பட்டார்)**

**வா.சா.2 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

எனது தகப்பனார் பெயர் சிக்கநாய்க்கர். எனது ஊர் திகினாரை. என்னை வாதி சாந்தமல்லப்பா சாட்சி சொல்ல அழைத்து வந்தார். எனக்கு நீதிமன்றத்திலிருந்து சம்மட்ன வரவில்லை. வழக்கு பற்றிய விவரங்கள் வாதி சொல்லிதான் எனக்கு தெரியும். இதற்கு முன்பு சாந்தமல்லப்பா இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கான அ.வ.எண்.171/2013 -ல் நான் வா.சா.3 ஆக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால், சரிதான். வாதி தாவா சொத்துக்களை அவரது மகனான ரமேஸிக்கு பத்திரம் எழுதிக் கொடுத்துள்ள விவரம் தெரியும். ஆனால், என்ன வகையான ஆவணம் என தெரியாது. தாவா காலை பூமிகள் அனைத்தும் வாதியின் மகனுக்கு சென்றுவிட்டது என்றால், சரிதான். தாவா சொத்தின் காலை எண் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. இதற்கு முன்பு வாதி சாந்தமல்லப்பா பிரதிவாதியான புட்டுசுவாமப்பா மற்றும் அவரது குடும்பத்தார் மீது தாக்கல் செய்து வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால், சரிதான். தாவா சொத்துக்களில் எவ்வித பாத்தியமும் இல்லாமல், வாதி பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. வழக்கு பற்றி எந்த விவரமும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு பற்றிய விவரம் தெரியாமல், வாதி சொல்லியதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.10.09 17:49:24 +0530

District Munsif